**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

EA.No.4/2024 In Ep.No.2/2020 In OS.No.27/2015

(R.W.2) - ராஜமணி தேதி-06.02.2026

**1** மற்றும் **2** ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. இம்மனுவில் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2 ஆவணங்களான ஏ.ம.சா.ஆ.1 மற்றும் 2 வேறு வழக்கான அசல் வழக்கு எண்.151/2016 என்ற வழக்கு சம்மந்தமான ஆவணம் என்றால் சரிதான். இம்மனு அசல் வழக்கு எண்.27/2015 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.27/2015 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மீது மேல் முறையீடு மாண்புமிகு சார்பு நீதிமன்றம் பத்மனாபபுரத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன மேல்முறையீடு எண் நினைவுள்ளதா என்றால் நினைவில்லை. மேற்சொன்ன மேல்முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.27/2015 -ல் நான் தீர்ப்பு கடனாளி என்றால் சரிதான். மனுவின் சொத்தின் மீது நடவடிக்கை எடுக்க 1 ஆம் எதிர்மனுதாரான / தீர்ப்பாணை பெற்றவருக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிர்கோரிக்கை மனுதாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றால் சரியல்ல.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் இந்த மனுவின் மனுதாரான ஜெனிகுமாரிக்கு சொத்தை விலைக்கு கொடுப்பதாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் என் அப்பாவின் மருத்துவ செலவிற்கும், வீடு கட்டுவதற்கும் பண தேவைக்காக மனுதாரரிடம் கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் வாங்கிய கடனை திரும்ப கொடுக்க முடியாததால் சொத்தை விலைக்கு கொடுத்து கடன் தொகையை அடைப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் சொத்தை வெளி நபருக்கு பெற்றுவிட்டால் கடன் தொகையை திரும்ப செலுத்தமாட்டேன் என்பதால் மனுதாரான ஜெனிகுமாரியே விலைக்கு வாங்கி கொண்டார் என்றால் சரிதான். கடன் பெற்ற தொகையை மீறி ரூ.195000/- ரூபாய்யை செலுத்தி கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க மனுதாரர் ஜெனிகுமாரி கேட்டுக்கொண்டு அதை செலுத்த நான்

முன் வராமல் என் கைவசம் எடுக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. ரூ.1,95000/- ரூபாய்க்கு ஈடாக மனுதாரர் ஜெனிகுமாரி 3 காசோலைகள் செலுத்தி கிரைய ஆவணம் ஏற்படுத்த முன் வந்தார் என்றால் சரிதான். இம்மனுதாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் மனு பட்டிகை சொத்தை விலைக்கு கொடுக்க நான் முன் வந்தேன் என்றால் சரிதான். நிறைவேற்று மனு எண்.2/2020 மனுவானது எதிர்கோரிக்கை மனுதாரான ஜெனிகுமாரியை கஷ்ட, நஷ்டபடுத்த வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.